கடவுள் இயேசுவை அனுப்பியது நம்முடைய எல்லாப் பிரச்சினைகளையும் போக்குவதற்காக அல்ல! மாறாக, நாம் அவற்றை சமாளிப்பதில் சிறந்தவர்களாக, மன உறுதி படைத்தவர்களாக மாறவே!

அதனால்தான் கிறிஸ்துமஸ் பண்டிகை நம் நம்பிக்கைக்கு உகந்ததாய் அமைய காரணமாக இருக்கிறது.

இயேசு உங்களுடன் தனிப்பட்ட உறவில் நுழைய விரும்புகிறார், மேலும், இங்கேயும், இப்போதும் என்றென்றும், எப்போதும் உங்கள் வாழ்க்கையின் முக்கிய நபராக உண்மையான பகுதியாக மாற விரும்புகிறார். அவர் உங்கள் இதய வாசல் முன் நிற்கிறார், நீங்கள் உங்கள் இதயக் கதவைத் திறந்து அவரை உங்கள் வாழ்க்கையில் ஏற்றுக் கொள்வதற்காக காத்திருக்கிறார். “ இதோ வாசற்படியில் நின்று தட்டுகிறேன்! ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு கதவைத் திறந்தால் அவனிடத்தில் நான் பிரவேசித்து அவனோடே போஜனம்பண்ணுவேன்! அவனும் என்னோடு போஜனம் பண்ணுவான்” (வெளிப்படுத்துதல் 3:20)

இந்த ஜெபத்தை மனப்பூர்வமாக நீங்களும் ஜெபியுங்கள்:
**“இயேசுவே, நான் செய்த எல்லா பாவங்களையும் மன்னியுங்கள். நீங்கள், எங்களுக்காக மரித்தீர்கள் என்று நான் நம்புகிறேன். நான் என் இதயத்தின் கதவைத் திறந்து உங்களை என் வாழ்க்கையினுள் அழைக்கிறேன். தயவு செய்து உங்கள் அன்பினாலும் பரிசுத்த ஆவியினாலும் என்னை நிரப்பி, உங்களைப் பற்றி நான் மேலும் அறிந்து கொள்ள எனக்கு உதவுங்கள். சத்தியத்தின் வழியில் என்னை வழிநடத்துங்கள். ஆமென்!”**

© 2022 Activated
மேலும் அறிய, எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடவும்: https://activated.org/en.




கடவுள் இயேசுவை அனுப்பியது நம்முடைய எல்லாப் பிரச்சினைகளையும் போக்குவதற்காக அல்ல! மாறாக, நாம் அவற்றை சமாளிப்பதில் சிறந்தவர்களாக, மன உறுதி படைத்தவர்களாக மாறவே!

அதனால்தான் கிறிஸ்துமஸ் பண்டிகை நம் நம்பிக்கைக்கு உகந்ததாய் அமைய காரணமாக இருக்கிறது.

இயேசு உங்களுடன் தனிப்பட்ட உறவில் நுழைய விரும்புகிறார், மேலும், இங்கேயும், இப்போதும் என்றென்றும், எப்போதும் உங்கள் வாழ்க்கையின் முக்கிய நபராக உண்மையான பகுதியாக மாற விரும்புகிறார். அவர் உங்கள் இதய வாசல் முன் நிற்கிறார், நீங்கள் உங்கள் இதயக் கதவைத் திறந்து அவரை உங்கள் வாழ்க்கையில் ஏற்றுக் கொள்வதற்காக காத்திருக்கிறார். “ இதோ வாசற்படியில் நின்று தட்டுகிறேன்! ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு கதவைத் திறந்தால் அவனிடத்தில் நான் பிரவேசித்து அவனோடே போஜனம்பண்ணுவேன்! அவனும் என்னோடு போஜனம் பண்ணுவான்” (வெளிப்படுத்துதல் 3:20)

இந்த ஜெபத்தை மனப்பூர்வமாக நீங்களும் ஜெபியுங்கள்:
**“இயேசுவே, நான் செய்த எல்லா பாவங்களையும் மன்னியுங்கள். நீங்கள், எங்களுக்காக மரித்தீர்கள் என்று நான் நம்புகிறேன். நான் என் இதயத்தின் கதவைத் திறந்து உங்களை என் வாழ்க்கையினுள் அழைக்கிறேன். தயவு செய்து உங்கள் அன்பினாலும் பரிசுத்த ஆவியினாலும் என்னை நிரப்பி, உங்களைப் பற்றி நான் மேலும் அறிந்து கொள்ள எனக்கு உதவுங்கள். சத்தியத்தின் வழியில் என்னை வழிநடத்துங்கள். ஆமென்!”**

© 2022 Activated
மேலும் அறிய, எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடவும்: https://activated.org/en.



“தேவன் ஆவியாய் இருக்கிறார்! அவரைத் தொழுது கொள்கிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும் ” (யோவான் 4:24) மற்றும் “அன்பில்லாதவன் தேவனை அறியான்! தேவன் அன்பாகவே இருக்கிறார்” (1 யோவான் 4:8) என்றும் வேதாகமம் சொல்கிறது. தேவன், உங்களையும், என்னையும், இந்த அழகான உலகத்தையும், முழு பிரபஞ்சத்தையும் படைத்த மாபெரும் சிருஷ்டி கர்த்தா ஆவார்! அவருடைய அன்பை நம் எல்லோருக்கும் தெளிவாக காட்டவும் நாம் எல்லோரும் அவரை நன்றாக புரிந்து கொள்ளவும், தேவன் தம்முடைய ஒரே குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை ஒரு மனிதனின் வடிவில் பூமிக்கு அனுப்பினார்.

தீர்க்கதரிசனத்தில் இயேசு நாதர், “அரசர்களின் அரசர்”, என குறிப்பிடப்பட்டு இருந்தாலும், அவர் அரண்மனையில் பிறக்கவில்லை. மாறாக, ஒரு மாட்டு தொழுவத்தின் மண் தரையில் பிறந்தார்! “அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெற்று, சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லாதிருந்தபடியினால், பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தினாள்” (லூக்கா 2:7). அவரது வருகை அந்நாளின் செல்வந்தர்கள் மற்றும் ஆட்சியில் இருந்தோரின் அதிகாரப்பூர்வ அங்கீகாரத்தைப் பெறவில்லை. மாறாக, ஒரு சில மேய்ப்பர்கள் மட்டுமே அவரைச் சந்தித்தனர்! அவர்கள் தேவ தூதர்கள் சொன்ன நற்செய்தியைக் கேட்டு வியந்தனர். "இன்று தாவீதின் நகரத்தில் உங்கள் இரட்சகர் பிறந்து இருக்கிறார்! அவரே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து! உன்னதத்தில் இருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக!”என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள்." (லூக்கா 2:8-14).

இயேசு கிறிஸ்து 30 வயதில் தனது வாழ்க்கைப் பணியைத் தொடங்கினார்! அவர் கடவுளைப் பற்றிய நற்செய்தியை பிரசங்கித்ததோடு மட்டுமல்லாமல், நல்லதொரு எடுத்துக்காட்டாய், மக்களிடையே வாழ்ந்தும் காண்பித்தார். அவர், ஆன்மீக தேவைகளுக்கு மட்டுமின்றி, அவர்களின் உடல் நலனுக்காகவும், நோய்வாய்ப்பட்டிருக்கும்போது அவர்களைக் குணப்படுத்துவதிலும், பசியாக இருக்கும் போது அவர்களுக்கு உணவளிப்பதிலும் கூட தனது நேரத்தை செலவிட்டார். அவர் தனக்குள்ள நற்பெயரை பற்றியும் எண்ணாமல் அனைவரையும் பாரபட்சமின்றி நேசித்தார்.

குடிகாரர்கள், விலைமாதர், பாவிகள் என ஒதுக்கப்பட்டவர்கள் மற்றும் தாழ்த்தப்பட்டவர்கள் போன்ற அனைவருடனும் அவர் நட்பு பாராட்டினார்! மேலும், “கடவுளின் அன்பு மற்றும் மன்னிப்பிற்கு யாரும் அப்பாற்பட்டவர்கள் அல்ல”, என்பதையும் நிரூபித்தார். இயேசுவின் மூலம், கடவுள் தனது அன்பை உலக மக்கள் அனைவருடனும் பகிர்ந்து கொண்டார். கடவுள், நம் ஒவ்வொருவரையும் நமக்காகவே நேசிக்கிறார். “ தம்முடைய ஒரே குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரை தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்” (யோவான் 3:16).

கடவுள் நாம் படும் வலியை நன்கு உணர்ந்திருக்கிறார்! அவர் நம் மன வேதனைகளைப் புரிந்து கொண்டு, நமது இழப்புகளுக்காக அனுதாபப்படுகிறார். அவர் நம்மை ஆற்றி குணப்படுத்த, ஆறுதல் செய்து உறுதியளிக்க விரும்புகிறார். அவர் நம்மை மிகவும் நேசிப்பதினால்தான், தம்முடைய ஒரே மகனை மனித உருவில், நம்முடைய கஷ்டங்களை அனுபவிக்க, அவருடைய கரங்களாக இருக்க, அவருடைய இதயத்தை புரிந்து கொள்ள நம்மிடையே அனுப்பினார்! மற்றும் அவருடைய அன்பு, மற்றும் மேன்மிகு சக்தியுடன் நேரடியாக, நேருக்கு நேர் தொடர்பை ஏற்படுத்துவதற்காகவும் இயேசுவை அனுப்பி வைத்தார்.

“தேவன் ஆவியாய் இருக்கிறார்! அவரைத் தொழுது கொள்கிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும் ” (யோவான் 4:24) மற்றும் “அன்பில்லாதவன் தேவனை அறியான்! தேவன் அன்பாகவே இருக்கிறார்” (1 யோவான் 4:8) என்றும் வேதாகமம் சொல்கிறது. தேவன், உங்களையும், என்னையும், இந்த அழகான உலகத்தையும், முழு பிரபஞ்சத்தையும் படைத்த மாபெரும் சிருஷ்டி கர்த்தா ஆவார்! அவருடைய அன்பை நம் எல்லோருக்கும் தெளிவாக காட்டவும் நாம் எல்லோரும் அவரை நன்றாக புரிந்து கொள்ளவும், தேவன் தம்முடைய ஒரே குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை ஒரு மனிதனின் வடிவில் பூமிக்கு அனுப்பினார்.

தீர்க்கதரிசனத்தில் இயேசு நாதர், “அரசர்களின் அரசர்”, என குறிப்பிடப்பட்டு இருந்தாலும், அவர் அரண்மனையில் பிறக்கவில்லை. மாறாக, ஒரு மாட்டு தொழுவத்தின் மண் தரையில் பிறந்தார்! “அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெற்று, சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லாதிருந்தபடியினால், பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தினாள்” (லூக்கா 2:7). அவரது வருகை அந்நாளின் செல்வந்தர்கள் மற்றும் ஆட்சியில் இருந்தோரின் அதிகாரப்பூர்வ அங்கீகாரத்தைப் பெறவில்லை. மாறாக, ஒரு சில மேய்ப்பர்கள் மட்டுமே அவரைச் சந்தித்தனர்! அவர்கள் தேவ தூதர்கள் சொன்ன நற்செய்தியைக் கேட்டு வியந்தனர். "இன்று தாவீதின் நகரத்தில் உங்கள் இரட்சகர் பிறந்து இருக்கிறார்! அவரே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து! உன்னதத்தில் இருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக!”என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள்." (லூக்கா 2:8-14).

இயேசு கிறிஸ்து 30 வயதில் தனது வாழ்க்கைப் பணியைத் தொடங்கினார்! அவர் கடவுளைப் பற்றிய நற்செய்தியை பிரசங்கித்ததோடு மட்டுமல்லாமல், நல்லதொரு எடுத்துக்காட்டாய், மக்களிடையே வாழ்ந்தும் காண்பித்தார். அவர், ஆன்மீக தேவைகளுக்கு மட்டுமின்றி, அவர்களின் உடல் நலனுக்காகவும், நோய்வாய்ப்பட்டிருக்கும்போது அவர்களைக் குணப்படுத்துவதிலும், பசியாக இருக்கும் போது அவர்களுக்கு உணவளிப்பதிலும் கூட தனது நேரத்தை செலவிட்டார். அவர் தனக்குள்ள நற்பெயரை பற்றியும் எண்ணாமல் அனைவரையும் பாரபட்சமின்றி நேசித்தார்.

குடிகாரர்கள், விலைமாதர், பாவிகள் என ஒதுக்கப்பட்டவர்கள் மற்றும் தாழ்த்தப்பட்டவர்கள் போன்ற அனைவருடனும் அவர் நட்பு பாராட்டினார்! மேலும், “கடவுளின் அன்பு மற்றும் மன்னிப்பிற்கு யாரும் அப்பாற்பட்டவர்கள் அல்ல”, என்பதையும் நிரூபித்தார். இயேசுவின் மூலம், கடவுள் தனது அன்பை உலக மக்கள் அனைவருடனும் பகிர்ந்து கொண்டார். கடவுள், நம் ஒவ்வொருவரையும் நமக்காகவே நேசிக்கிறார். “ தம்முடைய ஒரே குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரை தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்” (யோவான் 3:16).

கடவுள் நாம் படும் வலியை நன்கு உணர்ந்திருக்கிறார்! அவர் நம் மன வேதனைகளைப் புரிந்து கொண்டு, நமது இழப்புகளுக்காக அனுதாபப்படுகிறார். அவர் நம்மை ஆற்றி குணப்படுத்த, ஆறுதல் செய்து உறுதியளிக்க விரும்புகிறார். அவர் நம்மை மிகவும் நேசிப்பதினால்தான், தம்முடைய ஒரே மகனை மனித உருவில், நம்முடைய கஷ்டங்களை அனுபவிக்க, அவருடைய கரங்களாக இருக்க, அவருடைய இதயத்தை புரிந்து கொள்ள நம்மிடையே அனுப்பினார்! மற்றும் அவருடைய அன்பு, மற்றும் மேன்மிகு சக்தியுடன் நேரடியாக, நேருக்கு நேர் தொடர்பை ஏற்படுத்துவதற்காகவும் இயேசுவை அனுப்பி வைத்தார்.